கும்பகோணம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனத்தின் மூலம் எம்.ஆர்.ஐ இயந்திரம் அமைக்க சுமார் 1.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கட்டிட பணிகளை மாநிலங்களவை உறுப்பினரும், நிதி நிறுவனத்தின் தலைவருமான சு.கல்யாணசுந்தரம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார், பின்னர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள்ள பார்வையாளர்கள் உணவு விடுதி சிலிண்டர் தட்டுப்பாட்டால் மூடப்பட்டிருப்பதை முற்றுகையிட போவதாக கூறிய பொதுமக்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி உணவு விடுதி திறக்க உரிய ஏற்பாடு செய்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், மேயர் க.சரவணன், பொதுக்குழு உறுப்பினர் இரா.அசோக்குமார், மாநகர துணைச் செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையை ஏற்று, சேலம் கிழக்கு மாவட்டம், வீரபாண்டி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட, பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சி கொத்துக்காரன்காடு பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. உறுப்பினர்கள் 20க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். அப்போது வீரபாண்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் சு.சதீஷ்குமார் உடனிருந்தார்.

‘டில்லி சரணம்பாடிகள்’ – ‘அரிதாரப் பூச்சு’களின் ஏமாற்று வித்தைகளைப் பொய்யாக்கி

கொள்கைக் கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் வெற்றி நோக்கி விரைகிறார் நம் முதலமைச்சர்!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, மார்ச் 28-

‘டில்லி சரணம்பாடிகள்’, ‘அரிதாரப் பூச்சு’களின் ஏமாற்ற வித்தைகளைப் பொய்யாக்கி, கொள்கை அடிப்படையிலான கூட்டணிக் கட்சிகளின் ஒத்துழைப்புடன் வெற்றி வாயில் நோக்கி விரைகிறார் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

வரும் ஏப்ரல் 23-ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்றத்திற்கு நடைபெறும் பொதுத் தேர்தலில், போட்டியிடும் கட்சிகள், அணிகள்பற்றிய இறுதி நிலவரம் இப்போது ஏறக்குறைய உறுதியாகி வெளிவந்துவிட்டது.

ஒரு நல்லரசின் நாயகராக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் களத்தில் உள்ளார்!

கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அய்ந்தாண்டுகள் அருமையான ‘திராவிட மாடல்’ ஆட்சி, அதன் தலைவர் முதலமைச்சர் மாண்பமை மு.க.ஸ்டாலின் அவர்களது தலைமையில், மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தேர்தலில், கொள்கையொத்த 23 கட்சிகளுடன் கூட்டணியாக மீண்டும் ஆட்சி அமைக்கும் வகையில், தமிழ்நாட்டின் உரிமைகள், வளர்ச்சி, சமூகநீதி, மதச்சார்பின்மை, மகளிர் நலன், சமத்துவம் இவற்றைத் தனது ஆட்சியின் சாதனைச் சரித்திரங்களாக்கி, களத்தில் வாக்காளர்களின் வரவேற்பைப் பெற்று, திராவிட ஆட்சியின் பாரம்பரிய கொள்கைப் பெருமை மற்றும் சாதனைகளை மேலும் வளர்க்கவும், உள்ளூர் மக்கள் முதல் உலக - புலம் பெயர் மக்கள் வரை பலரது பாராட்டு, வாழ்த்துகளை வரித்துக் கொண்ட ஒரு நல்லரசின் நாயகராக அவர் களத்தில் உள்ளார்!

அவரது தலைமையில், கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக - கொள்கைக் கூட்டணியாகவே உருவாகி, திருவாகிய கூட்டணி. வெற்றிக் களங்களைத் தொடர்ந்து பெற்று, முத்திரை பதித்து, நமது தமிழ் நாட்டின் உரிமைகள், பண்பாடு, நாகரிகம், மொழி, மாநில உரிமைகளை விழுங்க நினைக்கும் ஆதிக்க சக்திகளை எதிர்த்து, நிமிர்ந்து, தேர்தல் களத்தில் முன்னிலையில் நிற்கிறார், அவருடன் கூட்டணித் தலைவர்களும் நிற்கின்றனர்.

எடப்பாடி பழனிசாமி ‘டில்லி சரணம்’ பாடிவிட்டார்!

கடந்த கால தேர்தல்களில் தொடர்ந்து சுமார் பத்து முறை தோல்விகளைச் சந்தித்த எதிர்க்கட்சித் தலைவர் - அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள், 31 ஆண்டுகாலம் ஆட்சியிலிருந்த ஒரு கட்சியின் மாட்சியைக் குலைக்கும் வண்ணம், ‘மோடியா, லேடியா?’ என்று அக்கட்சியின் பிரபலத் தலைவராக இருந்த ஜெயலலிதா அம்மையாரின் கருத்துகளைக்கூட தூக்கி எறிந்துவிட்டு, பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ். பிடியிலிருந்து தங்களை மீட்க முடியாத வண்ணம், டில்லிக்குச் சென்று, அங்கே எடுத்த முடிவுகளை ஏற்று, ‘டில்லி சரணம்’ பாடி கூட்டுக்குள் அடைபட்டுவிட்டார்.



டில்லி - ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வின் ஆணையை ஏற்று, அங்கே எடுக்கப்பட்ட முடிவினை இங்கே வந்து அறிவிக்கும் பரிதாப நிலையில் உள்ள கூட்டணியில் பெயருக்கு மட்டும் இவர் தலைவராகவும், அமித்ஷாவே முழு அதிகாரம் பெற்ற செயல் தலைவராகவும் இருக்கும் நிலைதான் இறுதிக் காட்சியாக தேர்தல் களத்தில் உள்ளது.

இவர் எதிர்க்கட்சித் தலைவராக 66 சட்டமன்ற உறுப்பினர்களுடன் இருந்தபோதுகூட, தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகவோ, ‘நீட்’ மற்றும் உரிய நிதி பெறுதல் போன்றவற்றிற்காகவோ - வாதாடியோ, போராடியோ வந்த வரலாறு படைத்தவரல்லர்!

எதிர்பார்த்த நடிகர் கட்சியும் இவர்களை ஏமாற்றி ‘பெப்பே’ கூறிவிட்டது!

முன்பிருந்த முழு பலம் இழந்து, பிளவுபட்ட சில கட்சிகளே இவர்களின் அணியில், தேசிய ஜனநாயகக் கூட்டணியா? (NDA). அ.தி.மு.க. கூட்டணியா? எதையும் வலுவுடன் அழுத்தந்திருத்தமாகக் கூட கூற முடியாத இக்கட்டான நிலையில் களம் காணுகின்றன.

மற்றபடி ஊடகங்கள் பெயரளவில் கூறும் அய்ந்து அணிகளில், ஒன்று, வெறும் ஒப்பனை அணி. “நானே ராஜா, எனது ராஜ்ஜியத்தில் மும்மாரி பெய்கிறதா?” என்று அருகில் இருக்கும் சிலரைக் கேட்டே தெரிந்து கொள்ளும் ‘அற்புதம்’ படைக்கும் அரசியல் மின்மினிப் பூச்சி. மற்றவை பொருட்படுத்த தேவையற்றவை.

எந்த ஒரு கட்சியும் ஏறிட்டும் பார்க்காத யதார்த்தம்!

‘அதிகாரப் பங்களிப்புத் தருவோம்’ என்ற நடிகரின் வெற்றுத் தூண்டிலுக்குக் கூட தமிழ் நாட்டில் எந்த ஒரு கட்சியும் ஏறிட்டும் பார்க்காமல் ஒதுங்கியதுதான் யதார்த்தம்!

மற்றவை சில “ஊடக ஊறுகாய் கட்சிகளும், அவசர 777 பிராண்டுகளும்தான்!”

‘திராவிட மாடல்’ ஆட்சி 2026–இல் அமைவது உறுதி!

தி.மு.க. கூட்டணியின் கொள்கை வரலாறும், சாதனைச் சரித்திரமும், மகளிர், இளைஞர், மாணவர், தொழிலாளர், விவசாயிகள் அனைத்துத் தரப்பினர்களின் ஆதரவினை நமது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒருங்கே பெற்று, வெற்றியின் வாயிலில் நுழைய 175 தொகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் களம் காண வீரநடை - வேக நடை போட்டு, “234 தொகுதிகளும் நம் தொகுதிகளே” என்று உணர்ச்சிப்பூர்வமாக அறிவித்து விவேக வியூகங்களோடு பிரச்சாரத்தைத் தொடங்கிவிட்டார்!

அவர் உழைப்பிற்கு ஈடு, இணை எவரும் இல்லை. அவர்தான் இதயமாகி, எல்லாமுமாகி வெற்றிக் களம் காண வேக நடை போடுகிறார் என்பதால், மீண்டும் ‘திராவிட மாடல்’ ஆட்சி 2026 இல் என்பது உறுதி! உதயசூரியன் தகத்தகாய ஒளியுடன் வீசி எழுவது முக்காலும் உறுதி!

ஒத்துழைப்புத் தரும் கூட்டணிக் கட்சிகளின் கொள்கை உணர்வு என்றும் மாறாது. நியாயமான கோரிக்கைகளைக்கூட அவர்கள் விட்டுத் தந்ததால், கொள்கை எதிரிகளை அவ்வுறுதி ஏமாற்றமடையவும் செய்தது!

கொள்கையாளர்களின் பார்வையில்...

நண்பர் கலைஞானி கமல் ஹாசன் போன்றோர்கூட யதார்த்தம் புரிந்து, மிகவும் பண்போடு “தி.மு.க. கூட்டணிக்கு நிபந்தனையற்ற ஆதரவு” என்ற அவரின் பிரகடனத்தால், முதலமைச்சரின் பாராட்டைப் பெற்றதுடன் கொள்கையாளர்களின் பார்வையிலும் மேலும் உயர்ந்துள்ளார்!

அனைவரும் ஒரே கொள்கைக் குடும்பத்தவர். “பதவிகள் வரும், போகும். இலட்சியங்கள்தான் நிரந்தரமானவை” என்ற நல்ல பாடத்தைத் தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்கள் அழகுடன் தந்திருக்கின்றனர்.

அதன் தலைவர்களுக்கு நமது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க.வின் நன்கொடை வசூல்!

புதுடெல்லி, மார்ச் 28 -

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தபிறகு, அக்கட்சி நன்கொடை பெறுவது தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2024 - 2025 நிதியாண்டில் மட்டும் பா.ஜ.க. 6 ஆயிரத்து 74 கோடி ரூபாய் நன்கொடை பெற்றுள்ளது தெரியவந்துள்ளது.

ஜனநாயகச் சீர்திருத்தங்களுக்கான அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், 2024 - 2025 நிதியாண்டில் அரசியல் கட்சிகளின் நன்கொடை குறித்த விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 2024 - 2025 நிதியாண்டில் காங்கிரஸ், ஆம் ஆத்மி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட தேசிய கட்சிகளின் மொத்த நன்கொடையைவிட, பா.ஜ.க. பெற்றுள்ள நன்கொடை சுமார் 10 மடங்கு அதிகமாகும்.

மேலும், 2023 - 2024 நிதியாண்டில் பா.ஜ.க. பெற்ற 2 ஆயிரத்து 243 கோடி ரூபாயைவிட இது சுமார் 171 சதவிகிதம் அதிகம்.

2024 - 2025 நிதியாண்டில் தேசிய கட்சிகள் 6 ஆயிரத்து 648 கோடியே 563 லட்சம் ரூபாய் நன்கொடையாகப் பெற்றுள்ளன.

இதில், பா.ஜ.க. மட்டும் மொத்தம் 6ஆயிரத்து 74 கோடி ரூபாயும், காங்கிரஸ், 517 கோடி ரூபாயும் பெற்றுள்ளன.

பறிமுதல் செய்ததைத் திரும்பப் பெற

மாவட்டம் தோறும் குறை தீர்ப்புக் குழுக்கள் அமைப்பு!

தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

சென்னை, மார்ச் 28 -

பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்களால் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் இதர பொருட்களை உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, திரும்பப் பெற்றுக் கொள்ள மாவட்டந்தோறும் குறை தீர்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பறிமுதல்கள் தொடர்பான குறைகளுக்கு இக்குழுக்களை அணுகி தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மாவட்டம்தோறும் அமைக்கப்பட்டுள்ள இக்குழுக்களின் தொடர்பு எண்கள் :

★ திருவள்ளூர் - 7373704202

★ சென்னை - 9551055182

★ காஞ்சிபுரம் - 9442745251

இதேபோல் அனைத்து மாவட்டங்களுக்கும் தொடர்பு எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

பாலியல் குற்றங்களில் ஈடுபட்ட

நாடாளுமன்ற, சட்டமன்ற பா.ஜ.க. உறுப்பினர்கள் 44 பேருக்கு அக்கட்சி பாதுகாப்பு!

காங்கிரஸ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, மார்ச் 28 -

தேசிய மகளிர் காங்கிரஸ் தலைவர் அல்கா லம்பா டெல்லியில் செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது, பா.ஜ.க.வைச் சேர்ந்த 44 நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மீது, மிகத் தீவிரமான பாலியல் வன்கொடுமை மற்றும் பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டுகள் உள்ளதாக தெரிவித்தார்.

பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக அவர்களை பா.ஜ.க. பாதுகாத்து வருகிறது என்று கடுமையாக விமர்சித்த அவர்,

கோவாவில் பா.ஜ.க. கவுன்சிலரின் மகன், 3 ஆண்டுகளில் 20 முதல் 30 சிறுமிகளை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய வழக்கை சுட்டிக் காட்டினார்.

அதேபோல் மகாராஷ்டிராவில் தன்னைத் தானே கடவுள் என கூறிக்கொள்ளும் அசோக் காரத் 58 பெண்களை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம், அரியானா, ஹிமாச்சாலப் பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் பா.ஜ.க.வினர் மீதான பாலியல் குற்றச்சாட்டுகளை தேசிய மகளிர் காங்கிரஸ் தலைவர் அல்கா லம்பா பட்டியலிட்டார்.

பா.ஜ.க. எம்.பி. பிரிஜ் பூஷண் சிங் மீதான மல்யுத்த வீராங்கனைகளின் பாலியல் குற்றச்சாட்டு, உன்னாவ் பாலியல் வன்கொடுமை வழக்குகளை சுட்டிக்காட்டிய அவர், பிரதமர் மோடி மீது பா.ஜ.க. மூத்த தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறிய குற்றம்சாட்டிகளையும் குறிப்பிட்டார்.

மேலும், ஒன்றிய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரிக்கும் எப்ஸ்டீன் கோப்புகளுக்கும் இடையிலான தொடர்பு குறித்து நாடாளுமன்றத்தில் விரிவான விவாதம் நடத்தப் படவில்லை என்றும் பாலியல் குற்றங்களில் தொடர்புடைய நபர்களை பா.ஜ.க. பாதுகாப்பதாகவும் அல்கா லம்பா குற்றம்சாட்டினார்.

எண்ணெய் நிறுவனங்களுக்குப் பயனளிக்கும் வகையில்

கலால் வரியைக் குறைத்தது ஒன்றிய அரசு!

பெட்ரோல் - டீசல் விலை மட்டும் குறையாதாம்!

புதுடெல்லி, மார்ச் 28 -

பெட்ரோல் டீசல் மீதான கலால் வரியை ஒன்றிய அரசு குறைத்துள்ளது. இருப்பினும் பெட்ரோல், டீசல் விலை குறையாது என தகவல் வெளியாகியுள்ளது.

வளைகுடா போரால் உலகம் முழுவதும் உள்ள எண்ணெய் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்தியாவில் பாதிக்கப்பட்டுள்ள எண்ணெய் நிறுவனங்களுக்கு கலால் வரியை குறைத்து ஒன்றிய அரசு உத்தரவிட்டுள்ளது.

பெட்ரோல் மீதான கலால் வரி 13 ரூபாயிலிருந்து 3 ரூபாயாகவும், டீசல் மீதான கலால் வரி 10 ரூபாயிலிருந்து பூஜ்ஜியமாகவும் மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

கலால் வரி குறைக்கப்பட்டாலும், பெட்ரோல், டீசல் குறையாது என ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

சில்லறை விற்பனை மட்டத்தில் நுகர்வோருக்கு விலைக் குறைப்பு இல்லை என்று அவர் விளக்கம் அளித்துள்ளார். இதனால் பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. முகாம் அலுவலகத்தில் தருமபுரி தி.மு.க. மேற்கு மாவட்டச் செயலாளர், முனைவர் பெ.பழனியப்பன் தலைமையில் வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தல் குறித்து மாவட்ட சார்பு அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2026 தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைக்க ஆற்றவேண்டிய கழக பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அஞ்சாநெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரி

மார்ச் 28 (1949)

“சுயமரியாதை இயக்கத்தின் சுடர்! தன்மதிப்பு இயக்கத்தின் தனிப்பெரும் தளபதி! மூடப்பழக்க வழக்கங்களை முறியடிக்கும் தலைவன்! வைதீகத்தின் வைரி! வருணாசிரமத்தின் விரோதி! சீர்திருத்தச் செம்மல்! சொற்செல்வன்! சோர்வற்ற உழைப்பாளி! அஞ்சா நெஞ்சுடன் அறிவுப்பணி புரிந்து வந்தவர்!” என அறிஞர் அண்ணாவின் பாராட்டைப் பெற்றவர்.

முதல்முதலாக காஞ்சிபுரத்தில் இந்தி எதிர்ப்பு மாநாட்டை நடத்திய பெருமைக்குரியவர்.

‘தூக்குமேடை’ நாடகத்தை கலைஞர் எழுதி நடிகவேள் எம்.ஆர்.ராதா அவர்களுடன் முக்கியப் பாத்திரத்தில் நடித்து தஞ்சையில் அரங்கேற்றப்பட்ட போது நாடகத்திற்கு தலைமையேற்ற அழகிரி அவர்கள் கலைஞரின் எழுத்தாற்றலையும், நடிப்பையும் பார்த்துவிட்டு, ‘கலைஞர்’ என்ற பட்டத்தை தன் வாயால் உச்சரித்து வழங்கினார்.

“சிம்மம் கர்ச்சித்தது, புலி உறுமியது, கோடையிடி குமுறியது, பெரியார் பேச்சில் காணப்பட்ட அழுத்தம் திருத்தமான வாதமும், அழகிரி பேச்சில் காணப்பட்ட வீரங் கொப்பளிக்கும் வரிகளும், அண்ணா பேச்சின் அழகு தமிழும் என்னை வெகுவாகக் கவர்ந்தன” என்று தலைவர் கலைஞர் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.